Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 30 (14-01-1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 330

## டெங்கு, மலேரியா வன்னியில் பரவுகிறது

வன்னி, மன்னார் பிராந்தியங்களில் டெங்கு காய்ச்சல், மலேரியா, நெருப்புக்காய்ச்சல் என்பன பரவி வருகின்றன. முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பத்துக்கு மேற்பட்டோர் இந்த நோய்களுக்குப் பலியாகியுள்ளனர். மன்னாரில் மடு அகதி முகாமில் 20 இற்கு மேற்பட்டோர் தொற்று நோய்களுக்கு பலியாகியுள்ளனர். பூநகரி மக்கள் தங்கியிருக்கும் முழங்காவிலில் பல சிறுவர்கள் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருசிறுமி பலியானார். அப்பகுதிகளில் மருத்துவ வசதியின்மையால் இது ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# மலையகத்திற்கு விசேட அதிரடிப்படை: பெரும் தேடுதல் வேட்டை தீவிரம்

## புலிகள் போர்வையில் இளைஞர் கைது

(பதுளை)

மலையகத்தில் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. மலையகப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அப்பகுதிக்கு இராணுவமும் விசேட பொலிஸ் அதிரடிப் படையணிகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. கடந்த சில தினங்களாக பொலிஸ் வேட்டை தீவிரமாக்கப்பட்டு பெருந்தொகையில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மலையகத்தில் இராணுவ, பொலிஸ் அடக்குமுறை தீவிரமடைவதை ஆட்சேபித்து பல தோட்டங்களில் வேலை நிறுத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் திரு. தொண்டமான் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்க அரச தரப்பிலுள்ள சிங்கள இனவாத சக்திகள் மலையகத்தில் இப்படியான ஒரு நெருக்கடி நிலையை திட்டமிட்டு உருவாக்கியுள்ளதாகவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கடந்த ஒருமாத காலமாக நடைபெற்றுவரும் தேடுதல் வேட்டை எல்ல இந்துக்கல தோட்ட இரட்டைக்கொலை, சம்பளப்பணம்கொள்ளை என்பனவற்றைத் தொடர்ந்து நடாத்தப்படுகிறது.

கடந்த வெள்ளியன்று இப்பகுதியில் ஒரு தோட்டத்துரையும், ஒரு சிறிலங்கா பொலிஸாரும் கொல்லப்பட்டதோடு 10 இலட்சம் ரூபா சம்பளப்பணம் கொள்ளையிடப்பட்டதும் தெரிந்ததே.

தோட்டங்கள் தோறும் தேடுதல் நடாத்தவென 400 சிறிலங்கா பொலிஸ் அதிரடிப் படையினர் அங்குசென்றுள்ளனர். ஊவா மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் இருந்தும் பெருமளவு சிறிலங்கா பொலிஸார் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். நகரப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் காவலில் ஈடுபட்டுள்ளது.

பணத்திற்காகக் கொலை, கொள்ளை நடாத்தப்படவில்லை, இது அரசியல் நோக்கத்திற்காகவே செய்யப்பட்டதென சிறிலங்கா சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் புலிகள் தொண்டா ஆட்சேபம்

பலாலி ஆசிரியர் கலாசாலையில்

## ஆங்கிலம், வர்த்தகம் விசேட பயிற்சி ஆரம்பம்

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பல வருடங்களின் பின் மீண்டும் புதிதாக வர்த்தகம் மற்றும் ஆங்கில பாட ஆசிரியருக்கான விசேட பயிற்சிஆரம்பிக்கப்படவுள்ளது

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பமாகுமென யாழ்.பிராந்திய கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் வர்த்தகத்துறை விசேட பயிற்சிக்கு மிகக் கூடுதலான ஆசிரியர்கள் விண்ணப்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## சிறிலங்கா புலனாய்வாளர் இந்தியா பயணம்

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக விசாரணை நடாத்திவரும் இந்திய புலனாய்வு துறையினருடன் தகவல்களை பரிமாறிக்கொள்ள சிறிலங்கா புலனாய்வுதுறை அதிகாரிகள் இருவர் இந்தியா சென்றுள்ளனர்.

குற்றப் புலனாய்வு பணியக பணிப்பாளர் றொட்றி குணசேகர, பிரதிப் பணிப்பாளர் லயனல் குணதிலக ஆகிய இருவருமே அங்கு சென்றவர்களாவர்.

அமைச்சர் ரஞ்சனின் படுகொலை, கூட்டுப்படை தலைமை அலுவலக குண்டு வெடிப்பு தொடர்பாகவும் இவர்கள் ஆராய்வார்கள் என 'லங்கா புவத்' தெரிவித்தது.

## ஆங்கில மருந்துகள் விற்பனையில் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆயுர்வேத வைத்தியர்களுக்கு ஆங்கில மருந்துப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவது முற்றாக தடை செய்யப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் மருந்துப் பொருள் விநியோகம் மற்

மையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி முடிவு உட்பட வேறும்பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலிகளுடன் மகனை

# புலிகள் போர்வையில் இளைஞர் கைது

(பதுளை)

மலையகத்தில் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. மலையகப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அப்பகுதிக்கு இராணுவமும் விசேட பொலிஸ் அதிரடிப் படையணிகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. கடந்த சில தினங்களாக பொலிஸ் வேட்டை தீவிரமாக்கப்பட்டு பெருந்தொகையில் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மலையகத்தில் இராணுவ, பொலிஸ் அடக்குமுறை தீவிரமடைவதை ஆட்சேபித்து பல தோட்டங்களில் வேலை நிறுத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் திரு. தொண்டமான் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேசுவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளை முறியடிக்க அரச தரப்பிலுள்ள சிங்கள இனவாத சக்திகள் மலையகத்தில் இப்படியான ஒரு நெருக்கடி நிலையை திட்டமிட்டு உருவாக்கியுள்ளதாகவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கடந்த ஒருமாத காலமாக நடைபெற்றுவரும் தேடுதல் வேட்டை எல்ல இந்துக்கல தோட்ட இரட்டைக்கொலை, சம்பளப்பணம்கொள்ளை என்பனவற்றைத் தொடர்ந்து நடாத்தப்படுகிறது.

கடந்த வெள்ளியன்று இப்பகுதியில் ஒரு தோட்டத்துரையும், ஒரு சிறிலங்கா பொலிஸாரும் கொல்லப்பட்டதோடு 10 இலட்சம் ரூபா சம்பளப்பணம் கொள்ளையிடப்பட்டதும் தெரிந்ததே.

தோட்டங்கள் தோறும் தேடுதல் நடாத்தவென 400 சிறிலங்கா பொலிஸ் அதிரடிப் படையினர் அங்குசென்றுள்ளனர். ஊவா மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் இருந்தும் பெருமளவு சிறிலங்கா பொலிஸார் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். நகரப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் காவலில் ஈடுபட்டுள்ளது.

பணத்திற்காகக் கொலை, கொள்ளை நடாத்தப்படவில்லை, இது அரசியல் நோக்கத்திற்காகவே செய்யப்பட்டதென சிறிலங்கா சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மலையகத்தில் புலிகள் தொண்டா ஆட்சேபம்

(கொழும்பு)

தோட்டப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஊடுருவியதாக வந்த செய்திகள் ஒரு சிலரின் பகற்கனவாகும்என அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

'புரொண்ட் லைன்' ஆங்கில சஞ்சிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டி யொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்சமாதானத்திற்கான எந்த யோசனையையும் பரிசீலனை செய்ய தான் தயாராக இருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறியிருக்கிறார் என்றுதெரிவித்துள்ளார்.

மேலும் அதில் அவர் குறிப்பிடுகையில்; எனது யோசனைகள் தொடர்பாக அவர் உறுதியை வெளிப்படுத்தவில்லை எனினும் அவற்றுக்கு விரோதமாக ஜனாதிபதி இல்லை என்றும் குறிப்பிட்டார்.

தமிழர் விவகாரத்தில் எதைத்தான் இணங்கிக் கொண்டாலும் அதைஅரசியல் அமைப்பு மாற்றங்களினூடாகவே செய்ய வேண்டும் என்ற உண்மையையும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும்,

இதனைச் செய்ய பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு தேவை எனவே இதற்குஎதிர்க்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'திட்டமிட்ட சதி இது' செல்லச்சாமி சீற்றம்

தோட்டத் தொழிலாளர்களினது அமைதியான வாழ்வை அச்சுறுத்த சில தீயசக்திகள் திட்டமிட்டு செய்த சதிவேலையே எல்ல இந்துகலையில் நடைபெற்ற கொள்ளை கொலை சம்பவமாகும். இவ்வாறு இ.தொ.கா. செயலாளரும் கைத்தொழில்இராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கு தொந்தரவு கொடுக்க சில தீய சக்திகள் முயலுகின்றன.

தொழிலாளர்கள் தமது சம்பளப்பணம் கொள்ளையிடப்படுவதனை விரும்பமாட்டார்கள். தொழிலாளர்கள் தேயிலை மலையில் வேலை செய்துகொண்டிருக்கும் போதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இது திட்டமிட்ட சதி ஆகும் என்று அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

## 1956இன் பின்பே தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது

இந்த நாட்டில் இனப்பிரச்சினைதலை தூக்கியதும்தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதும் 1956 ஆம் ஆண்டின் பின்னரே என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்

ஐ. தே. க. வின் குருநாகல் மாவட்ட மாநாடு நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மோதல்

வவுனியாவிலுள்ள பம்பைமடு, சாஸ்திரிகூழாங்குளம் பகுதிகளில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் நேற்று மோதல்கள் இடம்பெற்றன.

மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை.

## ஆங்கில மருந்துகள் விற்பனையில் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆயுர்வேத வைத்தியர்களுக்கு ஆங்கில மருந்துப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவது முற்றாக தடை செய்யப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் மருந்துப் பொருள் விநியோகம் மற்றும் விற்பனை தொடர்பாக நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்படி முடிவு உட்பட வேறும்பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச செஞ்சிலுவையில் தேடுதல் சேவைப் பிரிவு

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் தேடுதல் சேவைப் பிரிவு தனியாக இயங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது கோவில் வீதியில் அமைந்திருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைமைக்காரியாலயத்திற்த அருகில் இப்பிரிவு இபங்கும் என்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பலாலி ஆசிரியர் கலாசாலையில்

## ஆங்கிலம், வர்த்தகம் விசேட பயிற்சி ஆரம்பம்

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பல வருடங்களின் பின் மீண்டும் புதிதாக வர்த்தகம் மற்றும் ஆங்கில பாட ஆசிரியருக்கான விசேட பயிற்சிஆரம்பிக்கப்படவுள்ளது

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பமாகுமென யாழ்.பிராந்திய கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இதில் வர்த்தகத்துறை விசேட பயிற்சிக்கு மிகக் கூடிதலான ஆசிரியர்கள் விண்ணப்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## சிறிலங்கா புலனாய்வாளர் இந்தியா பயணம்

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக விசாரணை நடாத்திவரும் இந்திய புலனாய்வு துறையினருடன் தகவல்களை பரிமாறிக்கொள்ள சிறிலங்கா புலனாய்வுதுறை அதிகாரிகள் இருவர் இந்தியா சென்றுள்ளனர்.

குற்றப் புலனாய்வு பணியக பணிப்பாளர் றொட்றி குணசேகர, பிரதிப் பணிப்பாளர் லயனல் குணதிலக ஆகிய இருவருமே அங்கு சென்றவர்களாவர்.

அமைச்சர் ரஞ்சனின் படுகொலை, கூட்டுப்படை தலைமை அலுவலக குண்டு வெடிப்பு தொடர்பாகவும் இவர்கள் ஆராய்வார்கள் என 'லங்கா புவத்'தெரிவித்தது.

## கடற்புலிகளுடன் மகனை இணைத்த வீரத்தாய்

கடற்புலிகளுடன் தனது புதல்வனை வீரத் தமிழ்த்தாய் ஒருவர் இணைத்துள்ளார். கடந்த 12 ஆம் திகதி ஞாயிறு தினம் இச்சம்பவம் குருநகர் கடற்புலிகள் காரியாலயத்தில் வைத்து நடைபெற்றது.

இவ்வாறு தனது மகனைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரி பலி சிப்பாய் காயம்

திருக்கோணமலை மாவட்டம் புளியங்குளத்தில் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடிக்கு சிறிலங்கா இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பலாலியில் படைகுவிப்பு விமானங்கள் வேவுபார்ப்பு

பலாலி சிறிலங்கா இராணுவமுகாமில் பெருமளவு சிங்களப் படைகள் தரையிறக்கப்பட்டுவருவதுடன் படையினருக்குத் தேவையான இராணுவத் தளபாடங்களும் களஞ்சியப்படுத்தப்பட்டுவருகின்றன.

விமானப் படையினரது விமானங்கள் வவுனியாவில் இருந்தும், அனுராதபுரத்தில் இருந்தும் படைகளையும், இராணுவத் தளபாடங்களையும் பலாலி இராணுவ முகாமிற்கு எடுத்துவந்து தரையிறக்கி வருகின்றன.

அதேவேளை நேற்றுச் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குடாநாடு முழுவதும் வேவு பார்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன. வேவு விமா

(4ஆம் பக்கம் பார்க்க)

# பொங்கலோ பொங்கல்

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத் தமிழென
பொங்கலே பொங்கு!
தமிழன் வீரம் தரணியில் ஓங்க
பொங்கலே பொங்கு!!
தாழ்ந்த இனம் வீறுகொண்டு எழுந்ததென
பொங்கலே பொங்கு!!!

அங்கத்தவர் வங்கியான
அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கத்தின்
வட கிழக்கெங்கும் பரந்து வாழும் பல்லாயிரம்
அங்கத்தவர்களுக்கும்

## மங்கலப் பொங்கல் வாழ்த்துக்கள்

உங்களுக்காக......
உங்கள் இளம் சந்ததியினர் நல்வாழ்விற்காக
ஆரம்பத் தொட்டிலிலிருந்து...
இறுதிக் கட்டில் வரை.....

பன்முகப்படுத்தப்பட்ட பதவிசான திட்டங்கள். அனைவரும் சேருங்கள். இணைந்து பெரு நன்கொடைகள் பல பெறுங்கள்.

1957-ம் ஆண்டிலிருந்து வளரும் நீண்ட நெடும்பாதையில்
35-வது ஆண்டாக தொடரும் எமது
**மக்கள் சேவை....**

★ **நன்கொடைகள் :**
ருது, திருமணம், முதிர்ச்சிச்சகாயம், அந்தியகாலம்

❋ **சேவைகள்**
கைமாற்றுக் கடன், குறுகியகாலக் கடன், உயர் கல்விக் கடன், நீண்டகாலக் கடன், உண்டியல் மாற்றம், அடகு.

**திட்டங்கள்:**
சேமிபபு, நிலையான வைப்பு, 5 வருட நன்கொடை வைப்பு, வட்டி விகிதம்: மாதாந்தம் 16% வருடாந்தம் 18% உரிமைகள் பெற 1 வருட அங்கத்துவம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

★ **பிரவேசம் 120.00**
★ **பங்குப் பணம் 25.00**
★ **மாதாந்தம் 20.00**

(இ/3774)

செ இ. ஆனந்தராசா — பொது முகாமையாளர்
கே.எஸ். அருளானந்தர் — தலைவர்

மேலதிக விபரங்கட்கு:
பொது முகாமையாளர்

## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட்

தபாற்கந்தோரடி - வட்டுக்கோட்டை.


# ஓராண்டு நினைவஞ்சலி




தமிழீழ மக்கள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்
சிறுவர் பாடசாலை
ஆசிரியர் பயிற்சி நிலையம் - மூளாய்

## இறுதிப் பரீட்சை 1992

தை மாதம் 18ஆந் திகதி [18.01.1992] மேற்படி நிலையத்தினூடாக 1990, 1991ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்றோருக்கு இறுதிப் பரீட்சை பின்வரும் ஐந்து நிலையங்களில் நடைபெறும்.

**யாழ். மாவட்டத்தில் பரீட்சை நடாத்தப்படும் நிலையங்கள்:**

1. யா/விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்
(i) சங்கானை உ. அ அ பிரிவில் உள்ளோர்.
(ii) சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.
(iii) ஊர்காவற்றுறை (காரைநகர்) உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.

2. யா/யாழ். இந்துக்கல்லூரி - யாழ்ப்பாணம்
(i) நல்லூர் உ. அ. அ. பி, உள்ளோர்.
(ii) கோப்பாய் உ. அ அ. பிரிவில் உள்ளோர்.
(iii) உடுவில் உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.
(iv) தெல்லிப்பளை உ அ. அ. பிரிவில் உள்ளோர்.
(v) வேலணை உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.
(vi) ஊர்காவற்றுறை உ. அ. அ. பிரிவில் உள்ளோர்
(vii) நெடுந்தீவு உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.

3. யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் - கரவெட்டி
(i) கரவெட்டி உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.
(ii) பருத்தித்துறை உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.
(iii) மருதங்கேணி உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.
(iv) சாவகச்சேரி உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பயிற்சி பெற்ற சிறுவர் பாடசாலை ஆசிரியர்கள் அந்தந்த அரசாங்க அதிபர் செயலகத்தில் 16ஆந் திகதி (16.01.1992) சென்று விபரங்களை அறிந்து கொள்ளவும். எல்லாப் பரீட்சார்த்திகளும் இம்மாதம் 16ஆந் திகதி (16.01.1992) பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை காலை 10-00 மணிக்குப் பின் அந்தந்த நிலையங்களில் பரீட்சைக் கட்டணம் ரூ. 50 கட்டி எடுக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம். அனுமதிப் பத்திரம் பெற வரும்பொழுது அடையாள அட்டை கொண்டு வரவும். அடையாள அட்டை இல்லாதோர் கிராம சேவை உத்தியோகத்தரின் அத்தாட்சிப் பத்திரம் கொண்டுவரவும் அனுமதிப்பத்திரம்இல்லாமல் பரீட்சார்த்திகள்பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

குறிப்பு;- 5.1.1990இல் நடைபெற்ற பரீட்சைக்கு
(i) தோற்றி சித்தியடையாதோரும்
(ii) பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டு தோற்றாதோரும் இப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

துணுக்காய், பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 1989ஆம் ஆண்டு பயிற்சி எடுத்த மேற்படி (i), (ii) தகுதியுடையோர் முல்லைத்தீவு அல்லது கிளிநொச்சி பரீட்சைநிலையங்களின்அனுமதிப் பத்திரம் பெற்று பரீட்சை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

**சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி - 1992**

புதிதாக 1992இல் மேற்படி பயிற்சி பெற விரும்புவோர் மேற்கூறிய நிலையங்களில் 16ஆம், 17ஆம், 18ஆம், 19ஆம் திக்திகளில் அந்தந்த நிலையங்களில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கமும் 19 1.1992ஆம் திகதியில் அந்தந்த இடங்களில் கூட்டம் வைத்து அங்கத்துவத்தை பலப்படுத்தவும்.

6 மாத சாதாரண பயிற்சி மேற்படி பயிற்சி நிலையங்களில் தொடங்க உள்ளோம்.

**இயக்குநர்,**
சிறுவர் பாடசாலை (2098)
ஆசிரியர் பயிற்சிநிலையம், மூளாய்.
**INSTITUTE OF NURSERY STUDIES-MOOLAI**


# நினைவு கூருகின்றோம்

**1992-01-14**



**வீரவேங்கை மாயவன்**

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீச்சாவெய்திய

**மணி** [இளையதம்பி மாசிலாமணி - அம்பாறை]

வாழைச்சேனையில் சிறிலங்காப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் காயமுற்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். வில்லியம்** [கிருபைராசா ஜீவராசா - வாழைச்சேனை]

1988 ஆம் ஆண்டு பரந்தனில் இந்தியப்படையினரின் பண்ணை முகாம் காவலரண் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**கர்ணன்** [கருப்பையா சந்திரன் - கணேசபுரம் கிளிநொச்சி]

பரந்தனில் இந்தியப்படை.யினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**பிரசாத்** [சிங்கமுத்து ரவீந்திரகுமார் - ஜெயந்திநகர், கிளிநொச்சி)

1989 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் இந்தியப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

**குகேந்திரராசா** [முத்துக்குமார் குகேந்திரராசா - அக்கரைப்பற்று]

புளியங்குளத்தில் மக்கள் தொண்டர்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**விஜி** [காந்தரூபன் - கொக்குத்தொடுவாய், மணலாறு]

இறம்பைக்குளத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**அல்பேட்** [வேலுப்பிள்ளை கணேஸ்வரன் - நெளுக்குளம் கணேசபுரம் வவுனியா]

திருநெல்வேலியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**யூலியன்** [அந்தோனி சகாயநாதன் - ஆட்காட்டிவெளி, மன்னார்]

கிளிநொச்சி, 5 ஆம் வாய்க்கால் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கி இருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திப

**டிஸ்கோ \ ஞானம்** [மீனாட்சி சுந்தரம் சண்முகசுந்தரம் - பொலிகண்டி, வல்வெட்டித்துறை

இத்திமடுவில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து

ஆரம்பத் தொட்டிலிலிருந்து....
இறுதிக் கட்டில் வரை.....
பன்முகப்படுத்தப்பட்ட பதவிசான திட்டங்கள். அனைவரும் சேருங்கள். இணைந்து பெரு நன்கொடைகள் பல பெறுங்கள்.
1957-ம் ஆண்டிலிருந்து வளரும் நீண்ட நெடும்பாதையில்
35-வது ஆண்டாக தொடரும் எமது
மக்கள் சேவை....

★ **நன்கொடைகள் :**
ருது, திருமணம், முதிர்ச்சிச்சகாயம், அந்தியகாலம்

❋ **சேவைகள்**
கைமாற்றுக் கடன், குறுகியகாலக் கடன், உயர் கல்விக் கடன், நீண்டகாலக் கடன், உண்டியல் மாற்றம், அடகு.

**திட்டங்கள்:**
சேமிப்பு, நிலையான வைப்பு, 5 வருட நன்கொடை வைப்பு, வட்டி விகிதம்: மாதாந்தம் 16% வருடாந்தம் 18% உரிமைகள் பெற 1 வருட அங்கத்துவம் பூர்த்தி செய்தல் வேண்டும்.

★ **பிரவேசம் 120.00**
★ **பங்குப் பணம் 25.00**
★ **மாதாந்தம் 20.00**

செ இ. ஆனந்தராசா — பொது முகாமையாளர்
கே.எஸ். அருளானந்தர் — தலைவர்

மேலதிக விபரங்கட்கு:
பொது முகாமையாளர்

## அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச் சங்கம் லிமிற்றெட்
தபாற்கந்தோரடி - வட்டுக்கோட்டை.

(இ 3774)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



வீர ஜனனம்
23-03-1969

வீர மரணம்
14-01-1991

**வீரவேங்கை**
**'சாலமன்'**
**(மயில்வாகனம் இராசலிங்கம்)**

மாவீரர் பாதையிலே மரணித்த சாலமனே!
வீரத்தாய் இங்கிருக்க வீரம் புரிவதற்கு
'வில்கம் விகாரை' போய் மடிந்தாய்
பொங்கல் தினத்தன்று பொன்னுயிரை
மாய்த்துக் கொண்டாய்
இராசலிங்கம் என்னும் இயற்பெயரை
'சாலமன்' என மாற்றி - விடுதலை
வேங்கைகளுடன் நீயும் இணைந்தாயே
போராடி ஓராண்டிலேயே உன்னுயிரையும்
விடுதலைக்கு வித்தாக்கிக் கொண்டாய்
ஆண்டுகள் பல சென்றாலும் அழியாது உன் - தியாகம்
உன் நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது

உன் பிரிவை நினைத்து வாடும்
அம்மா, அண்ணா - அண்ணிமார்
தங்கை, சகோதரர்கள், மாமா,
மாமிமார், உற்றார்,
உறவினர்கள்

இரணைக் கேணி,
குச்சவெளி,
திருக்கோணமலை.

(2083)

---

(iv) சாவகச்சேரி உ. அ. அ. பிரிவில் உள்ளோர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பயிற்சி பெற்ற சிறுவர் பாடசாலை ஆசிரியர்கள் அந்தந்த அரசாங்க அதிபர் செயலகத்தில் 16ஆந் திகதி (16.01.1992) சென்று விபரங்களை அறிந்து கொள்ளவும். எல்லாப் பரீட்சார்த்திகளும் இம்மாதம் 16ஆந் திகதி (16.01.1992) பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தை காலை 10-00 மணிக்குப் பின் அந்தந்த நிலையங்களில் பரீட்சைக் கட்டணம் ரூ. 50 கட்டி எடுக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம். அனுமதிப் பத்திரம் பெற வரும்பொழுது அடையாள அட்டை கொண்டு வரவும். அடையாள அட்டை இல்லாதோர் கிராம சேவை உத்தியோகத்தரின் அத்தாட்சிப் பத்திரம் கொண்டுவரவும் அனுமதிப்பத்திரம்இல்லாமல் பரீட்சார்த்திகள்பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

குறிப்பு;- 5.1.1990இல் நடைபெற்ற பரீட்சைக்கு
(i) தோற்றி சித்தியடையாதோரும்
(ii) பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டு தோற்றாதோரும் இப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர்.

துணுக்காய், பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 1989ஆம் ஆண்டு பயிற்சி எடுத்த மேற்படி (i), (ii) தகுதியுடையோர் முல்லைத்தீவு அல்லது கிளிநொச்சி பரீட்சைநிலையங்களின்அனுமதிப் பத்திரம் பெற்று பரீட்சை எடுக்க அனுமதிக்கப்படுவர்.

**சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி - 1992**

புதிதாக 1992இல் மேற்படி பயிற்சி பெற விரும்புவோர் மேற்கூறிய நிலையங்களில் 16ஆம், 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் அந்தந்த நிலையங்களில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கமும் 19 1.1992ஆம் திகதியில் அந்தந்த இடங்களில் கூட்டம் வைத்து அங்கத்துவத்தை பலப்படுத்தவும்.


6 மாத சாதாரண பயிற்சி மேற்படி பயிற்சி நிலையங்களில் தொடங்க உள்ளோம்.

இயக்குநர்,
சிறுவர் பாடசாலை
ஆசிரியர் பயிற்சிநிலையம், மூளாய்.
**INSTITUTE OF NURSERY STUDIES-MOOLAI**

(2098)

---

## 22-வது பிறந்த தினமும்
## 210-வது நாள் நினைவும்



வீரஜனனம்
14-01-1970

வீரமரணம்
16-06-1991

### லெப். கபில்
**மகேஸ்வரலிங்கம் சசிகரன்**
(ஏழாலை தெற்கு)

மண்ணில் மலர்ந்தாய் அன்று - நீ
மண்ணுக்காய் மலர்ந்தாய் இன்று
மறவர் வரிசையில் நின்றாய் அன்று - நீ
மாவீரனாய் மலர்ந்தாய் இன்று
-- அண்ணன் குடும்பத்தினர்.

(2097)

---

பாக்கிச் சூட்டில் காயமுற்று சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். வில்லியம்** [கிருபைராசா ஜீவராசா - வாழைச்சேனை]

1988 ஆம் ஆண்டு பரந்தனில் இந்தியப்படையினரின் பண்ணை முகாம் காவலரண் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**கர்ணன்** [கருப்பையா சந்திரன் - கணேசபுரம் கிளிநொச்சி]

பரந்தனில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**பிரசாத்** [சிங்கமுத்து ரவீந்திரகுமார் - ஜெயந்தி நகர், கிளிநொச்சி)

1989 ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் இந்தியப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

**குகேந்திரராசா** [முத்துக்குமார் குகேந்திரராசா - அக்கரைப்பற்று]

புளியங்குளத்தில் மக்கள் தொண்டர்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**விஜி** [காந்தரூபன் - கொக்குத்தொடுவாய், மணலாறு]

இறம்பைக்குளத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**அல்பேட்** [வேலுப்பிள்ளை கணேஸ்வரன் - நெளுக்குளம் கணேசபுரம் வவுனியா]

திருநெல்வேலியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**யூலியன்** [அந்தோனி சகாயநாதன் - ஆட்காட்டிவெளி, மன்னார்]

கிளிநொச்சி, 5 ஆம் வாய்க்கால் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கி இருந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**டிஸ்கோ \ ஞானம்** [மீனாட்சி சுந்தரம் சண்முகசுந்தரம் - பொலிகண்டி, வல்வெட்டித்துறை

இத்திமடுவில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கிருஷ்ணா**

1990 ஆம் ஆண்டு திருக்கோணமடுவில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த

**சின்னவன்** [சாமித்தம்பி இந்திரகுமார் - புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை]

1991 ஆம் ஆண்டு பாலாமடுவில் ஆற்றைக்கடக்கும்போது நீரில் மூழ்கியதில் எமைப்பிரிந்த

**நீதன்** [கனகரத்தினம் சந்திரன்-பன்குடாவெளி, மட்டக்களப்பு]

திருக்கோணமலை வில்கம் விகாரை முகாமைவிட்டு வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**பைரவன்** [சி. பாஸ்கரன் - அலஸ்தோட்டம், திருக்கோணமலை]

**மாயவன்** [நாகரத்தினம் புனிதராசா - 2 ஆம் வட்டாரம் குச்சவெளி, திருக்கோணமலை]

**சாலமன்** [மயில்வாகனம் இராசலிங்கம் - 2ஆம் வட்டாரம், இரணைக்கேணி, திருமலை]

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-3775)

## சிந்தனைக்கு

சூது ஒருபுறம்; எதையும் நம்பும் ஏமாளித் தனம் ஒருபுறம்; இவை இரண்டுக்கும் நடுவே நியாயத்தின் குரல் நெரிக்கப்படுகிறது.

— எட்மண்ட் பார்க்

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 14-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# சிறிலங்காவிற்கு கசக்கும் மத்தியஸ்தம்

தமிழீழ மக்களின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்கும் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமானால் அதற்கு மத்தியஸ்தம் வகிக்க கனடா அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. அத்தோடு போர் நிறுத்தம் ஏற்படும் பட்சத்தில் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கவும் தனது இராணுவ நிபுணர்களை அனுப்பி வைக்கவும் கனடா அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

கனடா அரசாங்கம் இலங்கையில் நிகழும் இனப்பிரச்சினை தொடர்பாக சிறிது காலத்திற்கு முன்பிருந்தே இதே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. சில மாதங்களுக்கு முன் கனடா சென்ற இனப் பிரச்சினைத்தீர்விற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவிடமும் இது தொடர்பாக கனடா அரசாங்கம் பேசியுள்ளது.

இவ்வாறான நிலைப்பாடு தனித்துவமான கனடா நாட்டின் நிலைப்பாடு அல்ல. பொதுவாக மேற்கு நாடுகளின் நிலைப்பாடு இவ்வாறானதொரு நோக்குச் சார்ந்ததாகவே உள்ளது.

ஐரோப்பாவைப் பொறுத்து தேசிய இனங்கள் விரும்பினால் பிரிந்துபோக அனுமதிப்பதே பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி என தற்பொழுது மேற்குலகம் கருதுகின்றது. முன்னாள் சோவியத் குடியரசுகள் பிரிந்து சென்று தனியரசுகளாக உருவாவதற்கும் தற்பொழுது யூக்கோசெலவோக்கியாவில் இருந்து ஸ்லோவேனியாவும், குரோசியாவும் பிரிந்து செல்வதற்கும் அனுமதி அளிக்கப்பட்டமையும் இதன் அடிப்படையிலேயே ஆகும்.

இந்நிலையில் தேசிய இனங்களின் பிரச்சினைக்கு முழுமையான சமஷ்டி மூலம் தீர்வு காண்பதென்பது இந் நாடுகளைப் பொறுத்து ஓர் குறைந்தளவு தீர்வுத்திட்டமே. ஆனால் சிறிலங்கா இந்தியா போன்ற நாடுகளில் அதிகார வர்க்கத்தினர் தேசிய இனங்களின் பிரச்சினைக்கு முழுமையான சமஷ்டி அமைப்பு முறை மூலம் தீர்வு காண்பது என்பது உலகில் எங்குமே நடைபெறாத நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு திட்டம் என எண்ணுகின்றனர்.

இந்நிலையில் கனடாவின் மத்தியஸ்கம் சமரச முயற்சிகள் என்பன இந்தியா, சிறிலங்கா போன்ற நாடுகளின் அதிகார வர்கத்தினருக்கு வேப்பம் காயாகவே இருக்கும். இந்தியாவைப் பொறுத்து தென்னாசியப் பிராந்தியத்தில் வெளிநாடுகளின் தலையீடு இருத்தலாகாது என்ற கோட்பாடு கெடுபிடிப் போர் முடிவால் தணிந்துபோய் இருப்பினும் இலங்கையில் உருவாகக்கூடிய ஒரு நிறைவான சமஷ்டி அமைப்பு முறை, 'இந்தியாவின் சமஷ்டி அமைப்பு, முறையைக் கேலி செய்துவிடும் என்பது இந்திய அதிகார வர்க்கத்திற்கு நன்கு தெரியும்.

சிறிலங்காவைப் பொறுத்து மத்தியஸ்தத்திற்கு அனுமதித்துவிட்டால் சமஷ்டி அமைப்பு முறையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலை உருவாகிவிடும். அமைச்சர் தொண்டமான் வைத்த அரைகுறைத் தீர்வுத் திட்டத்தையே ஏற்றுக்கொள்ள முடியாத பேரினவாத சக்திகளினால் எவ்வாறு ஓர் முழுமையான சமஷ்டி முறை பற்றி எவ்வாறு சிந்தித்துப் பார்க்க முடியும்.

கனடா என்றால் என்ன மேற்குலகில் யாராக இருந்தால் என்ன சிறிலங்கா அரசாங்கத்திற்கு உரிமைகள் வழங்கி பிரச்சினையைத் தீருங்கள் என்றஆலோசனை கசப்பானதாகவே இருக்கும் இந்நிலையில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தாமல் பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என மேற்குலகம் எண்ணினால் அது பகற்கனவாகவே முடியும். அதனால் அல்லலுறும் மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படப்போவதுமில்லை

நூல் அறிமுகம்:

# மு. திருநாவுக்கரசு எழுதிய இனப்பிரச்சினைபற்றியநூல்

★ இலங்கையின் இனப் பிரச்சினை எவ்வாறானது?
★ இனப்பிரச்சினைஒரு வர்க்கப் பிரச்சினையா?
★ தமிழ்த் தலைவர்களின் அகிம்சைப் போராட்டம் என்பது இடம்பெற்றதா?
★ சிங்களப் பேரினவாதம் எப்படி உருவானது?
★ வெள்ளையர் தமிழரை எப்படி நடத்தினர்?
★ கட்சி அரசியலினதும் பதவிப் போட்டியினதும் விளைவு என்ன?
★ இனப்பிரச்சினையில் அந்நியரின் கை எப்படிப் பதிந்தது?

இவ்வாறானஇன்னோரன்ன கேள்விகளுக்கு எல்லாம் இந்த நூல் திட்டவட்டமான பதில்களை அளிக்கின்றது; மறுக்க முடியாத விளக்கங்களைமுன் வைக்கின்றது. ஒவ்வொரு தமிழனும் தான் ஏன் பாதிக்கப்பட்டேன் என்பதை உணர்த்தும் பாங்கில் இந்த நூல் அமைந்துள்ளது.

'கடந்த கால வரலாற்றை ஆராய்வதென்பது எதிர் காலத்திற்கான ஒளியைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கே' என்ற வாக்கியத்துடன் மு. திருநாவுக்கரவு எழுதிய 'இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள்' என்றநூல் வெளிவரவுள்ளது.

இந்த வாக்கியத்தினூடாகவே இந்த நூல் ஆசிரியர் என்னநோக்கத்திற்காக தான் இந்த நூலை எழுதினார் என்பதை விளக்கி விட்டார்.

இந்த நூலை வெளியிட்டுள்ள தமிழ்த்தாய் பதிப்பகம் தனது பதிப்புரையில் 'இலங்கையில் தமிழ், சிங்கள தேசிய இனங்களின் முரண்பாடு சிக்கலானது. சிக்கலான இந்த விடயத்தை மிக எளிமையாக விளக்க இந்த நூல் முயன்றுள்ளது. அதில் வெற்றியும் கண்டுள்ளது.

''தமிழ், சிங்கள தேசிய இனங்களின் முரண்பாடுகள் முற்றிலும் புதிய கோணத்தில் பார்க்கப்பட்டுள்ளது. அதற்கான தரவுகள் ஆழமாக ஆராயப்பட்டு அழகாகத் தொகுக்கப்பட்டுள்ளன' என்றுகுறிப்பிடப்பட்டுள்ளன.

தேற்றத்தை நிறுவுவதற்கு தரவுகளைப்போடுவது போல இந்த நூலிலும் இனப்பிரச்சினைக்கான அடிப்படைகள் என்ன என்பதை தரவுகள் மூலம் கொண்டு வந்து நிறுவியுள்ளார். இதுவே இந்த நூலின் சிறப்பம்சமாகும்

இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வந்த வரலாற்று ஆய்வுமுறைகள் பிழையானவையாகவே காணப்பட்டன. இதனை நிவர்த்தி செய்யும் பணியில் இந்த நூல் அமைந்துள்ளது. இதனை இந்த நூலாசிரியர் தனதுமுன்னுரையில் 'வரலாற்றாய்வில் ஒரு பிழையான மரபே எம்மிடம் உண்டு. வரலாறு என்பது சமூகத்தின் இயக்கப் போக்கினையும் அவ்வாறு இயங்குவதற்கேதுவான சக்திகளையும்அடையாளம்காணும் ஒரு துறையாகும். பழங்கதைகளும், சம்பவங்களின் தொகுப்பும் வரலாறாகி விடாது. வெளித் தோற்றப் பாடுகளையே வரலாறு என்று விளக்கிவிடுகிறார்கள். ஆனால் அவற்றிற்கு உள்ளோடியாயிருக்கும் அம்சத்தை இவர்கள் கண்டுகொள்வதே கிடையாது. இப்படிப்பட்டவர்களிடமிருந்து வரலாற்றை விடுதலை செய்தாக வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வகையில் இந்தநூல் மேற் குறிப்பிட்ட வரைவிலக்கணத்தை கொண்டு 182 பக்கங்களைக் கொண்ட ஒரு நூலாக வெளீ வந்துள்ளது.

★ இலங்கையின் அமைவிடமும். அது இந்தியப் பின்னணியில் இருந்ததனால் சிங்கள பௌத்தர்களால் ஏற்படுத்திய 'தம்மதீப' கொள்கையும் தரவுடன் கொண்டு வந்து நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் நூலின் அம்சங்களை பார்த்தால்.

மூவாயிரம் ஆண்டிற்கு மேற்பட்ட கால வரலாற்றை ஏழு அத்தியாயங்களில் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவியதோடு, எதிரிகளும் ஒப்புக் கொள்ளத்தக்க வகையிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பின்னர் தமிழின எதிர்ப்பாக வடிவம் பெற்ற வரலாற்றையும் உயிராக எடுத்துக் கூறுகிறது.

இதே நேரம் எங்களது பிரச்சினையை வரலாற்று ரீதியில் தார்மீக ரீதியில், கோட்பாட்டு ரீதியில் ஐயந்திரிபற விளக்கி எதிரிகளும் ஒப்புக் கொள்ளத்தக்க முறையில் எமக்குள்ள பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமை தமிழர்கள் இம் மண்ணின் மைந்தர்கள் என்ற உண்மையை தகுந்த ஆதாரங்களுடன் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுச்சியடைந்த சிங்கள பௌத்த எழுச்சியை தனக்கே உரிய தரவுகளுடன்

| | |
|---|---|
| தலைப்பு : | இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படைகள். |
| ஆசிரியர் : | மு. திருநாவுக்கரசு. |
| வெளியீடு : | தமிழ்த்தாய் பதிப்பகம். |
| வெளியீட்டு திகதி: | 18 - 01 - 92 |
| வெளியீட்டு இடம் : | யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கம் |
| பக்கம் : | 182 |
| விலை : | ரூபா 100-00 |

இனப் பிரச்சினையானது உலகளாவிய முறையில் எவ்வாறு காணப்படுகிறது என்பதையும் இலங்கையில் அது எவ்வாறு தனித்துவமான ஒரு பண்பை பெற்றுக் காணப்படுகின்றது என்பதையும். விரவி ஆராய்ந்து. இது தான் இனப்பிரச்சினைக்கான காரணம் என்பதையும் அடையாளம் கண்டு எழுத முற்பட்டுள்ளது.

O இந்த நூலானது பின் வரும் அத்தியாயங்களாகபிரிக்கப்பட்டுள்ளது.

1. தேசிய வாதம்: தேசிய இனப்பிரச்சினை ஓர் அறிமுகம்.
2. இலங்கையில் இனங்களின் தோற்றமும் இனப்பிரச்சினை கருக் கொண்ட விதமும்.
3. இலங்கை: ஐரோப்பியர் வருகையும், பிரித்தானியர் தமிழரை ஒடுக்கிய விதமும்.
4. சிங்கள பௌத்த எழுச்சி-முதலாம் கட்டம்
5. சிங்கள பௌத்த எழுச்சி-இரண்டாம் கட்டம்
6. மூன்று தசாப்தங்களில் (1958 - 1990) இனப்பிரச்சினையின் போக்கு - சிலகுறிப்புகள்.
7. பல்லின அரசமைப்பு தோல்வி அடைந்தமை:பொதுவான தாக்கம்.

'கேள்வியும் நானே பதிலும் நானே' என்ற வகையில் வாதப் பிரதி வாதங்களை முன்வைத்து முடிவு ஒன்றை எடுக்க இந்த நூல் முற்பட்டுள்ளது. இந்த நூலின் எல்லா அத்தியாயங்களிலும் இந்த அணுகுமுறையே பின்பற்றப்பட்டுள்ளது.

நவீன உலக வரலாற்றில் பல்வகை தீர்வுகளை கண்டுள்ள நாடுகளை சுட்டிக் காட்டி அந்த நிலையில் இலங்கையில் இனவாதம் வளர்ந்த துயரத்தையும்,

இலங்கையில் ஐதீகத்திற்குள் நின்றே இனப்பிரச்சினையை சிங்கள மக்கள் பார்க்கின்றார்கள் என்பதையும்,

இந்தியாவின் கலாசாரத்தை ஏற்றுக் கொண்டு வந்த இலங்கை ஒரு எல்லைக் கப்பால் இலங்கையில் பரவக் கூடாது - இலங்கை அதில் அகப்பட்டு விடக்கூடாது என்பதற்கு இந்திய எதிர்ப்பை வளர்த்த விதத்தையும்,

இந்த இந்திய எதிர்ப்பு நிரூபித்துள்ள அதே நேரம் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளின்நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து 1958 ஆம் ஆண்டு வரையான இனப்பிரச்சினை சார்ந்த வரலாறும்,

சிங்களவர் மத்தியில் ஏற்பட்ட குடும்ப ஆதிக்க போட்டியிலும், கட்சி அரசியல் போட்டிகளின் போதும் தமிழர் நலன் பாதிக்கப்பட்ட

உமா

நிகழ்வுகளையும்,

சிங்களவர்களின், மேலை நாட்டவர்களின் இந்தியர்களின் ராஜதந்திரத்தினால் எவ்வாறு தமிழர் ஒடுக்கப்பட்டனர் என்பது மிக அழகாக வேதனையுடன் பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் வெளி வந்த விரல் விட்டு எண்ணக் கூடிய ஆய்வு நூல்களைத் தவிர இலங்கையின்இனப்பிரச்சினை குறித்து தமிழில் எந்த ஆய்வு நூலும் வெளிவர வில்லை என்ற எமது ஏக்கத்தை நிறையவே பூர்த்தி செய்யும் வகையில் பூரணமான ஆய்வுகளுடன் இந்த நூல் வெளிவரவுள்ளது.

# அதிர்ச்சியால் குடும்பஸ்தர் மரணம்

(கொடிகாமம்)

சங்கத்தானை மீனாட்சி அம்மன் வீதியைச் சேர்ந்த குடும்பஸ்தரான இ. கந்தசாமி (வயது 42) அதிர்ச்சியினால் மரணமானார்.

இவர் தனது வீட்டில் நித்திரை செய்யும்போது, இரவு இரண்டு மணிபளவில் களவர் நுழைவதைக் கண்ட வீட்டார் இவரை உடன் எழுப்பினர். அந்த அதிர்ச்சியினால் இவர் மரணமானார். இறந்தவர் நகைக்கடை உரிமையாளராவர். கள்வரும் இந்த அமளியில் ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (86)

# பாகிஸ்தானில் அணு குண்டு அழிக்க அமெ. கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அணுகுண்டு ஒன்றை தயாரித்திருக்கின்றது என்று அமெரிக்காவுக்கு நன்கு ஊர்ஜிதமாகி விட்டது என்று அமெரிக்க செனெட்டர் லாரி பிரஸ்லர் இஸ்லாமாபாத்தில் தெரிவித்தார்.

இஸ்லாமாபாத்தில் நேற்று பிரஸ்லர் செய்தியாளர் கூட்டமொன்றில் பேசினார்.

அணுவாயுத தயாரிப்பில் நடைமுறை சாராத திறனாற்றல் ஒன்றுக்குச்கும் அப்பாற்பட்டு இப்போது பாகிஸ்தான் சென்று விட்டது என்று அவர் தெரிவித்தார்.

இஸ்லாமிய குண்டு எனப்படும் வசதியைச் சில நாடுகள் தங்கள் வசம் கொண்டிருப்பது குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

அணுவாயுத வாய்ப்புப் பெற்ற இஸ்லாமியக் கூட்டரசின் ஒரு அங்கமாக பாகிஸ்தான் உருவெடுத்திடக்கூடிய சாத்தியக் கூறுகள் பற்றிக் கருத்து வெளியிட்ட அவர் தன்னுடைய அணுகுண்டையும், தன்னுடைய அணுவாயுதத் திறனாற்றலையும் பகிரங்கமாகவே அழித்துவிடுமாறு பாகிஸ்தான் அரசிடம் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சகஜமான நட்புறவுகளுக்கு இந்த நடவடிக்கை ஒன்றுதான் வழிகோல முடியும் என்றார் பிரஸ்லர்.

தன்னுடைய அணுவாயுதத் திட்டத்தை நிறுத்திக்கொள்வதற்கு தான் தயாராக இருப்பதாகக் கூறும் தகவல் எதையும் பாகிஸ்தானிடமிருந்து தனக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவிடம் அணுகுண்டு ஒன்று இருப்பதற்கான சான்று எதுவுமேயில்லை. ஆனால் பாகிஸ்தானோ தன்னுடைய அணுவாயுதத் திட்டத்தை மேலும் செயல்படுத்தி வருகின்றது என்றும் பிரஸ்லர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அணுகுண்டுகளை வைத்திருக்கும்இஸ்லாமியக்குழுஒன்று உருவாகுவது பற்றியும் வளர்ந்து வரும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தின் அர்த்தங்கள் குறித்தும் அச்சமும் ஐயப்பாடும் கணிசமான அளவிற்கு காணப்படுவதாக பிரஸ்லர் தெரிவித்தார்.

அணுவாயுதக் கருவிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வது மட்டுமன்றி, தங்களுடைய வழக்கமான ஆயுதங்களின் எண்ணிக்கையைக் குறைத்து வரும் நாடுகளோடு அமெரிக்க உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்காக இந்த மாதம் பிற்பகுதியில் மேலும் பல திருத்தங்கள் தயாராகி வருகின்றன என்றும் பிரஸ்லர் தெரிவித்தார்.

இதேவேளை ஆயுத உற்பத்தி நோக்குடைய தன்னுடைய அணுசக்தித் திட்டத்தை நிறுத்திக் கொள்ளுமாறு பாகிஸ்தானிடம் தெரிவிப்பதான அமெரிக்காவின் ஆலோசனையைப் பாகிஸ்தான் நிராகரித்தது. அணுவாயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் பாகிஸ்தான் மறுப்புத் தெரிவித்தது.

பாகிஸ்தான் நிதி அமைச்சர், வெளிவிவகார இணை அமைச்சரோடு அமெரிக்க றிப்பப்ளிக்கன் செனெட்டர் நடாத்திய பேச்சுவார்த்தைகளில் இந்த முடிவைப் பாகிஸ்தான் தெரிவித்தது.

## அமெரி. செனட்டரைசந்திக்க பாக். ஜனாதிபதி மறுப்பு

(இஸ்லாமாபாத்)

அமெரிக்க செனட்டர் பிரஸ்லரை சந்திக்க பாகிஸ்தான் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் மறுத்துவிட்டனர். அணு ஆயுதம் தயாரிக்கப்படமாட்டாது என்ற உறுதியை வழங்கினால் மட்டுமே அமெரிக்க உதவி வழங்கப்படும் என்ற 'பிரஸ்லர்' திட்டத்தின் காரண கர்த்தா இவராவர்.

அத்துடன் இந்தியா அணு ஆயுதம் தயாரிக்கவில்லை எனவும்பாகிஸ்தான் அணுஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுகிறது எனவும் இவர் தெரிவித்திருந்தது பாகிஸ்தானை சீற்றமடையச் செய்துள்ளது.

### சர்வதேச

றும் இதற்குப் பொறுப்பாக திரு. மோகன் அவர்கள் பணியாற்றுவார் என்றும் தெரிய வருகின்றது. [75]

### தேசிய

முன்தினம் குருநாகல் நகர மண்டபத்தில் நடைபெற்ற போது உரையாற்றிய பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

### மலையகத்திற்கு

தெரிவித்தார்.

கொள்ளையர்கள் செங்கலடியில் இருந்து பக்மிட்டியாவை, சியம்பலாண்டுவ, படல்கும்புர வழியாக நமுனுகல வந்திருக்கலாம் என்றும், சம்பவத்திற்கு முன் அப்பகுதியில் எங்காவது தங்கியிருந்திருக்கலாம்எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

தோட்ட சம்பளம் கொண்டு வரப்படும் விபரம், வாகன அடையாளம் என்பவற்றைக் கொள்ளையர்களுக்கு வழங்கினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் உள்ளூர் இளைஞர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### கடற்புலிகளுடன்

கடற்புலிகளுடன் இணைத்தவர் குருநகர் றெக்கிளமேஷனைச் சேர்ந்த மரியதாஸ் அக்கினேஸ் என்னும் வீரத்தாய்தான்.

இவரது 14 வயதை உடைய மரியதாஸ் அன்ரனி வின்ஸன் என்பவரை யாழ். மாவட்ட கடற்புலிகள் அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. ஸ்ரனி மாஸ்டரிடம் ஒப்படைத்த அந்த வீரத்தாய் கூறுகையில் தமிழீழப் போராட்டத்துக்கு கடற்புலிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதொன்றாகும். கடற்புலிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் எண்ணத்துடனேயே மகனை கையளித்துள்ளேன்' என்றார்.

இவரது முன்மாதிரியைக் கண்டு கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் பாராட்டுத் தெரிவித்தார். (21)

சகல விதமான அச்சு வேலைகள்,
சகல விதமான அச்சுத் தாள்களில்
சகல வர்ணங்களிலும் செய்துகொள்ள

நாடுங்கள்

**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி, (வைமன் வீதி)
**யாழ்ப்பாணம்.**

★ அரச, தனியார் நிறுவனங்கள், தனியார் வேலைகள் யாவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தீப்பிடித்த விமானத்தில் பாஸ்கரலிங்கம்

கடந்த வாரம் சென்னை விமான நிலைய ஓடுபாதையில் தீப்பிடித்த எயர்லங்கா விமானத்தில் நிதி அமைச்சு மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் பயணம்செய்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விமானத்தில் 124பயணி சென்றனர் என்றும், இவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

### பலாலி

னங்கள், உலங்கு வானூர்திகள், குண்டுவீச்சுவிமானங்கள் ஆகியவைகுடாநாட்டின் வான் பிராந்தியத்திலும், கடற்பிராந்தியத்திலும் நேற்று முழு நாளும் பறந்து திரிந்தன.

இவற்றைவிடவை-12, வை-8ரக விமானங்கள் குறிப்பிட்ட சமநேர இடைவெளியில்பலாலி விமானத்தளத்தில் தரையிறங்கிச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது. (க)

### ஆங்கிலம் வர்த்தகம்

பித்துள்ள போதிலும் பதினைந்துபேர் மட்டுமே தெரிவு செய்யப்படவுள்ளனர். எனவே இவர்களை தெரிவு செய்வதற்காக யாழ். கல்வித் திணைக்களத்தினால் விசேட புள்ளி வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இவர்கள் வர்த்தகதுறைகளில் பெற்ற சான்றிதழ்கள், க. பொ. த. (சா'த) உயர்தரம் மற்றும்பல்தொழில் நுட்ப கல்லூரியில் வர்த்தக துறையில் பெற்ற சான்றிதழ்கள், தட்டச்சு ஆகிய மேலதிக தகைமைகளையும் கருத்தில் கொண்டு புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்கள் நேர்முகப்பரீட்சையின் போது மேற்படி பயிற்சிகளில் பெற்ற சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டுமென யாழ். கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச)

### அதிகாரி

ணுவ அதிகாரி ஒருவர் பலியானார் ஒரு இராணுவ சிப்பாய் காயமடைந்தார். இத்தகவலை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் வெளியிட்டுள்ளன.

## நிவாரண மோசடி உதவி அரச அதிபர் கைது

(மட்டக்களப்பு)

அகதிகளுக்கு வழங்கும் உலர் உணவுப் பொருளில் மோசடி செய்த குற்றத்துக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

உதவி அரசாங்க அதிபருடன் சேர்த்து மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குழந்தைகளுக்கான பால் மா, மற்றும் உலர் உணவுப் பண்டங்களை இவர்கள் மட்டக்களப்பில் உள்ள தனியார் கடை ஒன்றுக்கு 6,00,000 ரூபாவிற்கு விற்றதாகச் சொல்லப்படுகிறது.

## ஒயில் திருடர்கள் காவல் துறையால் கைது

(சுண்டிக்குளி)

சுண்டிக்குளிப் பகுதியில் அமைந்திருக்கும் மின்மாற்றியில் இருந்த ஒயிலைக் களவெடுக்க முயன்ற இருவரை தமிழீழ காவல் துறையினர் பொதுமக்களின் உதவியுடன் கைது செய்தனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது மின் மாற்றி அறைக்குள் சென்ற இருவரை கண்ட பொதுமக்கள் உடனடியாக காவல் துறையினருக்கு தகவல் கொடுத்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (75)

## தீவகத்திலிருந்து 3நோயாளர் யாழ்.வந்தனர்

தீவகத்தில் சிறிலங்கா இராணுவத்தின் பிடியில் இருக்கும்ஆயிரக்கணக்கான மக்களுக்கு அடிப்படை மருத்துவவசதிகள்கூட இல்லாத நிலையில் நோயாளிகள் பலர் அவஸ்தைப் படுகின்றனர். இவ்வாறு தீவகத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்ட நோயாளியான திரு. ஆர். பெனடிக்ற் (வயது54)என்பவர் தெரிவித்தார்.இவர் எழுவைதீவைச் சேர்ந்தவர். இவருடன் அனலைதீவைச் சேர்ந்த எஸ். பாக்கியம் (வயது60), நயினாதீவைச் சேர்ந்தசெல்வி ரி. திவாகரி (வயது17) ஆகிய மூவரும் நோயினால்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் வேறும் சிலரும் அழைத்து வரப்பட்டிருக்கின்றனர். (க)

### ஆங்கில மருந்து

ஆங்கில மருந்து விற்பனையாளர்கள் தம்மால் கொழும்பிலிருந்து கொண்டுவரப்படும் மருந்துப் பொருள்களில் 50 வீதத்தை தனியார் மருத்துவர்களுக்கும், தனியார் வைத்தியசாலைகளுக்கும் மிகுதி 50 வீதம் ஆங்கில மருந்துச் சாலைகளுக்கு விற்பனைக்கு விட வேண்டும்.

தனியார் மருத்துவர்களுக்கும், தனியார் மருத்துவ வைத்தியசாலைகளுக்கும் முன்னுரிமை அளித்து ஒதுக்கப்பட்ட 50 வீத மருந்துகள் ஒரு கிழமைக்குள் சம்பந்தப்பட்டவர்களால் கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். அன்றேல் அவை ஆங்கிலமருந்துச்சாலைகளுக்கு விற்பனைக்கு விடப்படும்.

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்படும் ஆங்கில மருந்துகள் கொழும்புக் கொள்வனவு விலையுடன் 20 வீதம் கூட்டி மொத்த விலை நிர்ணயம் செய்வதுடன், இம் மொத்தவிலையுடன் 10 வீதத்தைக் கூட்டி சில்லறை விலை நிர்ணயிக்கப்படும்.

மக்களுக்கு அன்றாடம் தேவைப்படுவதும், அவசியம் தேவைப்படுவதுமான ஒரு சில மருந்துப் பொருள்களின் அதி உச்ச சில்லறை விலையை மக்கள் அறியும் வண்ணம் விளம்பரப்படுத்தல் வேண்டும்.

பிராந்திய சுகாதாரப்பணிப்பாளரின் தலைமையிலானகுழுவினால், மருந்துப் பொருள்களின் விலை நிர்ணயம்செய்யும் முன்னர் எம் மருந்துகளும் விற்பனைக்கு விடுதல் தடுக்கப்பட்டுள்ளது.

ஆங்கில மருந்து விற்பனை செய்யும் சகல மருந்து விற்பனை நிலையங்களிலும் விலை விபரப்பட்டியல் நுகர்வோர் கேட்கும் போது பார்வையிடக் கூடியவகையில் பேணப்படுதல் வேண்டும் ஆகிய முடிவுகளும் எடுக்கப்பட்டன. மருந்துப் பொருள்களின் விலைப்பட்டியல் மிக விரைவில்வெளியிடப்படவிருக்கிறது. (க,ச)

### மலையகத்தில்

கட்சிகளின் ஆதரவையும் ஜனாதிபதி பெற வேண்டியிருக்கும்; இதை அவர் பொறுத்திருந்து பார்க்க விரும்புகிறார். அதற்காக திறந்த மனதுடனேயே இருக்கின்றார் என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், எனது யோசனைகளை இந்தியா வரவேற்கும் என்றே நான் நினைக்கின்றேன். ஏனெனில் இலங்கைத் தமிழருக்கு உதவுவதற்காக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்டது.

இந்த உடன்படிக்கையைவிட ஒரு படி மேலானது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எனது திட்டத்தை அடிப்படையாக அந்த உடன்படிக்கை அமைவது குறித்து இந்தியா மகிழ்ச்சி அடைய கடமைப்பட்டது. அத்துடன் சகல அகதிகளும் இலங்கைதிரும்ப முடியும். இதை விடவேறு எதை அவர்கள் விரும்புகிறார்கள். எனது முயற்சியை இந்தியா வரவேற்கும் என உணர்வதாகவும் தொண்டமான் குறிப்பிட்டார்.